TNTP150005442024

Presented on : 16-10-2024
Registered on : 18-10-2024
Decided on : 24-06-2026
Duration : 1 years, 8 months, 8 days

**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக் M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 24-ம் நாள் புதன்கிழமை**
**அசல் வழக்கு எண்.99/2024**
**CNRNO.TNTP150005442024**

S. மதுரைவீரன்

... வாதிகள்

// எதிராக //

1. M. ராஜேந்திரன்
2. R. தனம்

... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது என் முன்பாக இறுதியாக கடந்த 15.06.2026 அன்று விசாரணைக்காக வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு. K. செல்லதுரை அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, 2-ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு. V. மனோகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பில் நிகழ்த்திய வாதங்களை கேட்டும், 2-ம் பிரதிவாதி தரப்பில் வாதுரை வழங்க போதிய வாய்ப்புகள் வழங்கியும், இதுநாள்வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . . . .

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.24 18:02:22 +0530

## தீர்ப்புரை

வாதியிடம் பிரதிவாதிகள் கடனுறுதிச்சீட்டின் பேரில் பெற்ற அசல் கடன் தொகை ரூ.4,00,000.00/-த்திற்கு தற்போதைய வழக்குரை தொகை ரூ.4,93,000.00/-ம், உரிய வட்டியும், பின்வட்டி கோரியும், செலவுத்தொகை கோரியும், வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 1 -ன் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## வழக்குரையின் சுருக்கம்.

(2.1)வாதியிடம் பிரதிவாதிகள் கடந்த 15.03.2022-ம் தேதி அவசர நிமித்தம், சில்லரை கடன்களை தீர்க்கவும், குடும்ப செலவிற்காகவும், சரியான பிரதிபிரயோஜனத்திற்கு ரூ.4,00,000/- கடன் பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.50 வீதம் வட்டி சேர்த்து வாதிக்காவது அல்லது வாதியின் உத்தரவு பெற்றவர்களுக்காவது கொடுத்து புரோநோட்டை செல்லுடன் வாபஸ் பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு பிரதிவாதிகள் கடனுறுதிச்சீட்டு எழுதி கொடுத்துள்ளார். மேற்படி கடனுக்கு ஆதரவாக பிரதிவாதிகள் பெயரில் கடந்த 28.12.1998-ம் தேதி ஏற்பட்ட உயில் சாசனமான முசிறி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.117/1998-ல் பதிவு செய்யப்பட்ட அசல் உயிலையும், 2-ம் பிரதிவாதி பெயரில் கடந்த 04.04.1988-ம் தேதிய முசிறி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.611/1988-ல் பதிவு செய்யப்பட்ட அசல் கிரையப்பத்திரத்தையும் வாதி வசம் பிரதிவாதிகள் கொடுத்துள்ளார்கள். பின்னர் வாதி, பிரதிவாதிகளிடம் கூடிய அசல், வட்டி தொகைகளை திருப்பி கொடுக்க கோரி பலமுறை நேரில் கேட்டும் இன்று நாளை தருவதாக சால்சாப்பு கூறி கொடுக்காமல் காலம் கடத்தி வந்தார்கள். எனவே, வாதி தாவா புரோநோட்டு தொகைகளை திருப்பி செலுத்தி புரோநோட்டை திரும்ப பெற்றுக்கொள்ளும்படி கூறி வழக்கறிஞர் அறிவிப்பு 27.06.2024 அன்று அனுப்பினார். அதனை 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளவில்லை என்பதால் திருப்பப்பட்டுள்ளது. 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டுள்ளார். அதன் பின்னரும் 2-ம் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை. எனவே, வாதி தாவா தொகையை வசூல் செய்வதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

## எதிர்வழக்குரையின் சுருக்கம்.

(3.1)தாவா மோசடி. தாவாப்படி வாதிக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கமாட்டாது. இந்த எதிர்வழக்குரையில் இந்த பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத்தவிர ஏனையவைகளை இப்பிரதிவாதி மறுக்கிறார். அவைகளை வாதியே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யும் மோசடியுமாகும். அவைகள் இந்த பிரதிவாதியால் மறுக்கப்படுகிறது. உண்மையில் பிரதிவாதிகள்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.24 18:02:29 +0530

வாதியிடம் எப்போதும் கடன் வாங்கியது இல்லை. கடன் வாங்க வேண்டிய அவசியமும் இருந்தது இல்லை. தாவா புரோநோட்டும் போர்ஜரியான ஒன்று. வாதியிடம் பிரதிவாதிகள் பணம் பெற்றுக்கொண்டு எவ்வித புரோநோட்டும் எழுதிக்கொடுக்கவில்லை. மேற்படி புரோநோட்டும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்தும் இந்த பிரதிவாதிகளினுடைய கையெழுத்து தான் என்பதை நிரூபிக்க வாதி கடமைப்பட்டுள்ளார். மேற்படி புரோநோட்டும் (Rank Forgery) பொய்யாக மோசடியாக தயார் செய்யப்பட்ட ஒன்றாகும். தாவா புரோநோட்டிற்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் தொடர்பும் இல்லை. வாதி மோசடியாக வாதிக்கு வேண்டிய சாட்சிகளை வைத்து புரோநோட்டை தயார் செய்து தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும். எனவே, தாவாப்படி எவ்வித தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல. இவ்வழக்கில் சொல்லியுள்ள வழக்குமூலமும் கற்பனையாக வழக்கிற்காக ஜோடித்து சொல்லப்பட்டுள்ளது. வழக்கை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

4.தாவா வழக்குரை மற்றும் பிரதிவாதியின் பதிலுரை சங்கதிகளை பரிசீலனை செய்து கீழ்காணும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

**<u>5.எழுவினாக்கள்</u>**

1. வாதிகள் கோரியபடி தாவா தொகை, பின் வட்டியுடன் திரும்ப பெறத்தக்கவரா?
2. வேறு என்ன பரிகாரம்?

6.வாதி தரப்பில் மதுரைவீரன் வா.சா.1 ஆகவும், சரவணன் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>எழுவினாக்கள் 1-ற்கான தீர்வு..</u>**

(7.1)பிரதிவாதிகள் கடந்த 15.03.2022-ம் தேதி தங்களது அவசர செலவிற்காக ரூ.4,00,000/- கடன் வாதியிடம் பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளதாகவும், மேற்படி கடனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.50/- வட்டி வீதம் வேண்டும்போது திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துவிட்டு அசல் மற்றும் வட்டி தொகைகளை செலுத்தாததால் வாதி தனது வழக்கறிஞர் மூலம் 27.06.2024-ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதனை 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டதாலும், 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டும் தாவா தொகையை

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.24 18:02:33 +0530

பின்வட்டியுடன் செலுத்த முன்வராததால் தாவா தொகையை வசூல் செய்ய வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(7.2)தாவா கடன் தொகை பெறும்போது பிரதிவாதிகள் தங்கள் பெயரில் ஏற்பட்டுள்ள அசல் உயில் ஆவணத்தையும், 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் அசலையும், கொடுத்து கடன் பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(7.3)1-ம் பிரதிவாதி வழக்கில் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார். 2-ம் பிரதிவாதி தரப்பில் பிரதிவாதிகள் வாதியிடம் எப்போதும் கடன் வாங்கியதில்லை எனவும், அதற்கான அவசியம் இருந்ததில்லை எனவும், தாவா கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுக்கவில்லை எனவும், தாவா கடனுறுதிச்சீட்டு மோசடியாக தயார் செய்யப்பட்ட ஒன்று என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(7.4)வழக்கு விசாரணையின்போது வாதி மதுரைவீரன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 15.03.2022-ம் தேதிய கடனுறுதிச்சீட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 28.12.1998-ம் தேதிய உயில் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 04.04.1988-ம் தேதிய கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 27.06.2024-ம் தேதி வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகவும், மேற்படி அறிவிப்பை 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை வா.சா.ஆ.5 ஆகவும், மேற்படி அறிவிப்பை 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.6 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.2 ஆக சரவணன் என்பவர் சாட்சியமளித்து பிரதிவாதிகள் கடந்த 15.03.2022-ம் தேதி வாதியிடம் ரூ.4,00,000/- கடன் பெற்றுக்கொண்டு அதற்காக தாவா கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளதாகவும், தாவா கடனுறுதிச்சீட்டினை தங்கராஜ் என்பவர் எழுதியதாகவும், பிரதிவாதிகள் கையெழுத்து செய்த பிறகு முதல் சாட்சியாக பிரகாஷ் என்பவரும், 2 வது சாட்சியாக தானும், கையெழுத்து செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். வாதி தனது குறுக்கு விசாரணையில் பிரதிவாதிகள் 15.03.2022-ம் தேதி கடன் வாங்கினார்கள் எனவும், அந்த கடன் தொகை கொடுக்க தனக்கு ஜவுளி தொழில் செய்வதால் பணம் கையிலிருந்தது எனவும், கடன் தொகைகளை 500 ரூபாய் நோட்டுகளாக 8 கட்டுகள் கொடுத்ததாகவும், கடனுறுதிச்சீட்டினை தங்கராஜ் என்பவர் எழுதினார் எனவும், பிரதிவாதிகள் அண்ணாதுரை என்பவர் மூலம் கடன் கேட்டதாகவும், அண்ணாதுரை தன் நண்பர் என்பதால் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். வாதியின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியம் வழக்கு சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் கோர்வையாக சந்தேகத்திற்கிடமில்லாமல் உள்ளது.

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.24 18:02:38 +0530

(7.5)வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில் தான் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து ஓய்வு பெற்றதாகவும், வாதி பிரதிவாதிகளுக்கு ரூ.4,00,000/- கடன் வாதி வீட்டில் வைத்து கொடுத்தார் எனவும், அப்போது தானும், தங்கராசும் உடனிருந்தோம் எனவும், தாவா புரோநோட்டில் பிரகாஷும் தானும் சாட்சி கையெழுத்து போட்டோம் என தெளிவாக சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியங்கள் தாவா சங்கதிகளை மெய்ப்பிக்கும் வகையில் உள்ளது. மேலும் வாதி தரப்பில் தாவா கடனுறுதிச்சீட்டு, பிரதிவாதிகளுக்கு கருப்பண்ணன் முத்துராஜா எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட அசல் உயில் ஆவணமும், 2-ம் பிரதிவாதி பெயரில் 04.04.1988-ல் ஏற்பட்ட அசல் கிரைய பத்திரமும் வழக்கு சங்கதிகளுக்கு வலு சேர்க்கும் வகையில் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பை 2-ம் பிரதிவாதி பெற்றுள்ளார் என்பது வா.சா.ஆ.6 ஆவணம் மூலம் அறியமுடிகிறது. வா.சா.ஆ.1 தாவா கடனுறுதிச்சீட்டு, வா.சா.ஆ.6 ஆன 2-ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை மற்றும் 2-ம் பிரதிவாதியின் வக்காலத்து மற்றும் பதிலுரையில் உள்ள கையெழுத்துக்கள் ஒரே மாதிரியாக தமிழில் தனம் என உள்ளது.

(7.6)1-ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராக உள்ளார். 2-ம் பிரதிவாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்து வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்திருந்தாலும் பதிலுரை சங்கதிகளை மெய்ப்பிக்க நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க முன்வரவில்லை. 2-ம் பிரதிவாதிக்கு சாட்சியமளிக்க பல வாய்ப்புகள் அளிக்கப்பட்டும், சாட்சியமளிக்கவில்லை. 2-ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டிலுள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என நிரூபணம் செய்ய எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. கையெழுத்து ஒப்பிட சமகாலத்திய ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து உள்ள ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப 2-ம் பிரதிவாதி நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் பிரதிவாதிகள் பெயரிலுள்ள அசல் சொத்து ஆவணங்கள் வாதிக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதற்கான விளக்கத்தினையும் 2-ம் பிரதிவாதி தெரிவிக்கவில்லை. வாதி தனது மெய்ப்பிக்கும் சுமையை வாதி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் வா.சா.1,2 சாட்சியத்தின் மூலம் நிரூபித்துள்ளதாலும், 2-ம் பிரதிவாதி தகுந்த சாட்சியங்கள் மூலம் பதிலுரை சங்கதிகளை நிரூபணம் செய்யாததாலும் வாதிக்கு மாற்றாவணச்சட்டம் பிரிவு 118 (a)-ன் படி அனுமானத்தின் அனுகூலங்கள் கிடைக்கத்தக்கது எனவும், தாவா சங்கதிகளை வாதி நிரூபணம் செய்துள்ளார் எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்து வாதி கோரியபடி தாவா தொகை, பின்வட்டியுடன் பெறத்தக்கவர் என எழுவினா 1-ற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.24 18:02:42 +0530

**<u>எழுவினா 2-ற்கான தீர்வு</u>**

(8.1)எழுவினா 1 -ற்கு வாதிக்கு ஆதரவாக தாவா தொகை வட்டியுடன் வாதிக்கு கிடைக்கத்தக்கது என தீர்வுகண்டுள்ளதால் தாவா செலவுத்தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டுமென முடிவு செய்து அவ்வாறே எழுவினா 2-ற்கு தீர்வுகாணப்படுகிறது.

இறுதியாக, இந்த வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வழக்குரை தொகை ரூ.4,93,000.00/-ம், அசல் தொகை ரூ.4,00,000/-த்திற்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பு தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை 6% பின்வட்டியும், வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இன்று 2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 24-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.24 18:02:47 +0530

சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 .. மதுரைவீரன்

வா.சா.2 .. சரவணன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

வா.சா.ஆ.1 .. 15.03.2022-ம் தேதிய கடனுறுதிச்சீட்டு அசல்

வா.சா.ஆ.2 .. 28.12.1998-ம் தேதிய உயில் அசல்

வா.சா.ஆ.3 .. 04.04.1988-ம் தேதிய கிரையப்பத்திரம் அசல்

வா.சா.ஆ.4 .. 27.06.2024-ம் தேதி வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்

வா.சா.ஆ.5 .. வழக்கறிஞர் அறிவிப்பை 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை

வா.சா.ஆ.6 .. வழக்கறிஞர் அறிவிப்பை 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள் :- இல்லை.**

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.24 18:02:52 +0530

சார்பு நீதிபதி,
துறையூர்.